**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>**

**அசல் வழக்கு எண். 64/2020**

**பி.வா.சா.1 – பெரியசாமி**

**<u>02–12–2025 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் தாக்கல் செய்துள்ள பிரமாணவாக்குமூலத்தில் உள்ள விபரம் நான் சொல்லி தயாரிக்கப்பட்டது என்றால் சரிதான். வாதிகள் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை என்னிடம் காண்பிக்கப்படுவதுதான் எனறால் சரிதான். **அஞ்சல் ஒப்புதல் அட்டை அசல் வா.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்பட்டது.** நான் 1ம் பிரதிவாதி சார்பாகவும் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். வாதி எனக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவுப்புக்கு நான் இன்று வரை பதில் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அதே போல் 1ம் பிரதிவாதியும் பதில் கொடுக்கவில்லை என்றால் தெரியாது.

2. எனது பிரமாணவாக்குமூலத்தில் அ.வ. எண். 52/2017 எதற்காக யார் மீது யார் தாக்கல் செய்தவழக்கு என்றால் தங்கமுத்துசாமி மீது பாலகிருஷ்ணன் தடம் வேண்டும் என்று தாக்கல் செய்த வழக்காகும். அ.வ. 52/2017 பாலகிருஷ்ணனின் பெற்றோர்கள் தான் தங்கமுத்து சாமி மற்றும் எனது மீது தாக்கல் செய்த வழக்கு என்றும், அந்த விபரம்கூட தெரியாமல் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். ஆனால் அவ்வழக்கு வழக்கை நடத்தாததால் அவ்வழக்கு தள்ளுபடியாகிவிட்டது. 2017 முதல் 2020 வரை தாவா தடம் குறித்து ஏதேனும் வழக்கை வாதி மீது தாக்கல் செய்தேனா என்றால் செய்யவில்லை. 2017 ல் வழக்கு சொத்து வாதியின் பெற்றோர்கள் பெயரில் இருந்ததால் அவர்கள் வழக்கை தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான்.

3. வாதி பெற்றோர்கள் எழுதிவைத்த தானசெட்டில்மெண்ட் அடிப்படையில் வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள தானசெட்டில்மெண்ட் பத்திரம் குறித்து எந்த ஆட்சேபணையும் செய்யாமல் சட்ட நடவடிக்கையும் செய்யாமல் இருந்து வருகிறேன் என்றால் நான் ஆட்சேபணை எதுவும் செய்யவில்லை, தங்கமுத்துசாமி செய்துள்ளாரா என்று தெரியாது. இந்த வழக்கு நடக்ககூடாது என்று நானோ தங்கமுத்துசாமியோ உயர் நீதிமன்றத்தில் தடை கோரி நடவடிக்கை எடுத்தேனா என்றால் நான் செய்யவில்லை. நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்த மனுக்கல் மீது மேல் நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை.

4. நான் தற்போது சரஸ்வதியின் இடத்தில் குடியிருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் எனது பட்டா இடத்தில் குடியிருக்கிறேன். எனது பட்டா எண் என்ன என்றால் ஞாபகம் இல்லை. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் எனது பெயர் உள்ளது என்றால் சரிதான். அதில் 364/1145 என்ற காலைக்கு தான் எனது பெயருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியாக தெரியவில்லை. நான் 364/1145 காலையில் குடியிருக்கவில்லை என்றும். 368/1155 ல் காலையான 1ம் பிரதிவாதியின் மனைவிக்கு பாத்தியப்பட்ட சொத்தில் குடியிருந்து வருகிறேன் என்றால் தெரியாது. நான் எங்கு குடியிருக்கிறேன் என்ற விபரமே தெரியாமல் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1971 ல் இருந்து வீடு கட்டி குடியிருந்து வருகிறேன். நான் குடியிருந்து வருவதாக சொல்லும் இடம் சரஸ்வதியின் பங்கில் உள்ளது என்றால் சரிதான்.

5. அந்த பங்கிற்கு ஒட்டியே தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் வாதிக்கு கொடுத்த இடம் உள்ளது என்றால் தெரியாது. வாதிக்கு பாத்தியப்பட்ட இடத்தில் நான் ஆக்கிரமிப்பு செய்து இருந்துவருகிறேன் என்றால் நான்

ஆக்கிரமிக்கவில்லை அரசு கொடுத்த இடத்தில் 1971 முதல் தென்னைமரம் வைத்து விவசாயம் செய்து வருகிறேன். 1971 முதல் நான் அனுபவித்து வருவதற்கான ஆவணம் உள்ளதா என்றால் பட்டா உள்ளது. பட்டா எங்கு உள்ளது என்றால் தங்கமுத்துசாமியிடம் உள்ளது. அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன்.

6. இதனால் எனக்கும் வாதிக்கும் கருத்துவேறுபாடு ஏற்ப்பட்டு நான் 1ம் வாதியுடன் சேர்ந்து வாதிக்கு பாத்தியப்பட்ட தாவா தடத்தை பிரச்சினை செய்கிறேன் என்றால் அதில் வழித்தடமே இல்லை. வழக்கு சொத்தையும் வழித்தடத்தையும் நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்வதற்காக சென்ற போது நானும் 1ம் பிரதிவாதியும் உயர் நீதிமன்றத்தில் வழக்கு இருப்பதாக சொல்லி பிரச்சினை செய்தேன் என்றால் தடமே இல்லாததால் நான் கொடுக்கமாட்டேன் என்று சொல்லிவிட்டேன். பூர்வீக சொத்து சம்பந்தமாக உயர் நீதிமன்றத்தில் வாதி பிரதிவாதிகளுக்கு இடையே இருந்த வழக்கு வாதியின் தாயாருக்கு ஆதரவாக தீர்ப்பாகிவிட்டது என்றால் சரிதான்.

7. தாவா வழித்தடத்தை அளப்பதற்கு எனக்கு ஆட்சேபணை உள்ளது. வழக்கு சொத்து உள்ள வழித்தடத்தை வாதி நீதிமன்றம் மூலம் அளப்பதை நான் எவ்விதத்திலும் ஆட்சேபிக்க முடியாது என்றால் ஆட்சேபணை தெரிவிப்பேன். வழக்கு சொத்து வாதியின் சுவாதீனத்தில் உள்ளது என்றும் அதற்கு உண்டான தென்வடல் வழிதடத்தை நான் தடுக்க இயலாது என்றால் சரியல்ல. அனுபவப்படி எங்கள் இரு பெயரில் தான் உள்ளது. தாவா வழித்தடம் வாதிக்கு பூர்வீக வழியிலும், தானசெட்டில்மெண்ட் வகையில் பாத்தியப்பட்டது என்றால் அங்கு வழித்தடமே இல்லை. தென்வடல் வழித்தடம் எனக்கு 1ம் பிரதிவாதிக்கு அனுபவத்தில் உள்ளதாக சொல்கிறேனா என்றால் அங்கு வழித்தடமே இல்லை.

8. என்னிடம் காண்பிக்கப்படும் வழித்தடம் தான் தாவா தென்வடல் வழித்தமா என்றால் அங்கு வழித்தடமே இல்லை. வழித்தடம் உள்ளது என்றும் அதனை வாதி பயன்படுத்திவருவதை நான் இடையூறு செய்யக்கூடாது என்றால் அது பொது வழித்தடம் இல்லை என்பதால் அதனை வாதி பயன்படுத்துவதை நான் இடையூறு செய்வேன். வழக்கு சொத்தின் அனைத்து வருவாய் ஆவணங்களும் வாதியின் பெயரில் உள்ளதால் அந்த சொத்திற்கு உண்டான வழித்தடத்தை தடை செய்தவற்கு எனக்கு உரிமை இல்லை என்றால் அந்த சொத்திற்கு செல்வதற்கு அது பொது வழித்தடம் இல்லை. வாதி கொரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது )

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2025.12.02 13:44:43 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.